23.10.2025

அ.வ.எண். 113/2023

வா.சா.1 விஜயகுமாரி குறுக்கு விசாரணை

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலம் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். தாவாசொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவாசொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 1 ஏக்கர் 33 செண்ட் ஆகும். 1 ஏக்கர் 33 செண்ட் நிலத்தின் ஜக்குபந்தி தெரியுமா என்றால் கிழக்கு பக்கம் சேகர் நிலம் உள்ளது , மேற்கு சுகுமாரின் நிலம் உள்ளது, வடக்கு பக்கம் சீனிவாசன் நிலம் உள்ளது மற்றும் தெற்கு பக்கம் ராஜம் என்பவரின் நிலம் உள்ளது. மேற்சொன்ன ஜக்குபந்தி தவறானது அதனால் தாவாசொத்தின் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கை மூன்று பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் கேட்டுள்ளேன் மற்றும் 1ம் பிரதிவாதி 2 பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததால் அவரையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். எனது வழக்குரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவாசொத்தை எனது அப்பா 1997ம் வருடத்திலிருந்து அனுபவித்து வந்ததாக கூறினேன் ஆனால் அந்த அனுபவம் எனது அப்பாவுக்கு எப்படி கிடைத்தது என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தின் அனுபவம் ஒருவருக்கு வரவேண்டும் என்றால் ஏதேனும் ஒரு ஆவணம் மூலம் தான் அனுபவித்து

வருவார்கள். அதன்படி ஏதேனும் ஆவணம் மற்றும் வருவாய் துறை ஆவணம் எதுவும் எனது அப்பா அனுபவித்து வந்ததற்கு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்யவில்லை.

**3**. எனவே எனது அப்பா தாவாசொத்தை அனுபவித்து வந்ததாக எனது வழக்குரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளது தவறு. அவர் எந்த காலத்திலும் தாவாசொத்தை அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.**1** ஆவணம் என் பெயரில் தான் ஏற்படுத்தி கொண்ட ஆவணம் என்றால் சரிதான். அதை தயார் செய்தது நான்தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.**1** ல் கிரைய தொகை ஒரு லட்சம் என்று நிர்ணயம் செய்துள்ளது சரிதான். கிரைய தொகை எப்படி நிர்ணயித்தது என்றால் எனது அப்பா அனுபவித்து வந்ததால் **1**ம் பிரதிவாதி குறைந்த விலையில் நிலம் தருவதாக கூறினார்.

**4**. எனது வழக்குரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் எனது அப்பா தாவாசொத்தை அனுபவித்து வந்த காலத்தில் **1**ம் பிரதிவாதிக்கு எனது அப்பா தொகை கொடுத்ததாக எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.**2** **1**ம் பிரதிவாதி **2** மற்றும் **3** பிரதவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். அதில் கிரைய தொகையாக சந்தை மதிப்பு ரூ.**17,82,200** ஆக எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.**1** ஏற்பட்டு **2** ஆண்டுகளுக்கு பிறகு வா.சா.ஆ.**2** கிரைய பத்திரம் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.**1**ல் **08** டிசம்பர் **2021**ம் வருடம்

என்று குறிப்பிட்டு தேதியாக 08.12.2023 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் 2021ம் வருடம் தான் கிரைய உடன்படிக்கை ஏற்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணம் 1ம் பிரதவாதியிடமிருந்து தாவாசொத்தை அபகரிக்க வேண்டும் என்று தயார் செய்யபட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

**5**. வா.சா.ஆ.1 பற்றி 1ம் பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை தெரியாது என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் வா.சா.ஆ.1 பற்றி 1ம் பிரதிவாதிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் 1ம் பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை அதை பொறுத்து எந்த வித ஒப்பந்தமும் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் முன்னிலைக்கு 1ம் பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவ்வாறு எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் நான் கொடுக்கவில்லை நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**6**. தாவாசொத்தில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என்ன பயிர் வைத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த பிறகு வா.சா.ஆ.1ஐ நான் போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி எந்த தொகையையும் எக்காலத்திலும் என்னிடமிருந்து பெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பமும் வா.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பமும்

ஒப்பீட்டு செய்து பார்த்தாலே வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் 1ம் பிரதிவாதினுடையது இல்லை என்று தெரியும் அதனால் வா.சா.ஆ.1 போலியாக தயார் செய்யபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.